# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **நாட்டுப்புறப் பாட்டு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# நாட்டுப்புறப் பாட்டு

பழங்காலப் பண்பாட்டின் எச்சம் எனக் கருதப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஆகும். இவை வழிவழியாகப் பாடப்பட்டுவரும் வாய்மொழி இலக்கியங்களே.

பழமொழிகள், விடுகதைகள் கதைப்பாடல்கள், தொழிற்பாடல்கள் முதலியன நாட்டுப்புற இலக்கியங்களுள் அடங்கும். தொல்காப்பியர் நாட்டுப்புறப் பாடல்களை பண்ணத்தி என்று குறிப்பிட்டுள்ளார்.

- நாட்டுப்புறப்பாடல்கள் ஒருவர் பாடியதைப்போல அப்படியே இன்னொருவர் பாடுவது இல்லை.
- தமிழ் நாட்டுப்புறப் பாடலை முதன் முதலில் மு அருணாசலம் அவர்கள் 1943 -ல் காற்றில் மிதந்த கவிதை என்ற பெயரில் வெளியிட்டார்.
- நாட்டுப்புறவியலை தமிழகத்தில் தனித்தொரு துறையாக வளர்த்தவர் - நா.வானமாமலை.
- தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை என அழைக்கப்படுபவர் - நா.வானமாமலை.
- நாட்டுப்புறவியலின் தந்தை ஜேக்கப் க்ரீம்.
- நாட்டுப்புற இலக்கிய மும்மணிகள் எனப் போற்றப்படுவர்கள்.
    1. சே. அன்னக்காமு
    2. கி.வ.ஜெகநாதன்
    3. நா.வானாமாமலை
- நாட்டுப்புறப்பாடல்களின் வேறுபெயர்கள் - நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், நாட்டார் வழக்காற்றியல்.
- சென்னை போன்ற புறநகரங்களில் மக்களால் பாடப்படும் கானா பாடலும் நாட்டுப்புறப்பாடலே ஆகும்.
- இவருக்கு ஒப்பார் எவருமில்லை என்று ஒப்பிட்டு பாடுவது - ஒப்பாரிப் பாடல்

**நாட்டுப்புறப்பாடல்களின் வகைகள்:**

| | | |
|---|---|---|
| 1. தாலாட்டுப் பாடல்கள் | 2. விளையாட்டுப் பாடல்கள் | 3. தொழில் பாடல்கள் |
| 4. சடங்குப் பாடல்கள் | 5. கொண்டாட்டப் பாடல்கள் | 6. வழிபாட்டுப் பாடல்கள் |
| 7. ஒப்பாரிப் பாடல்கள் | | |

**நாட்டுப்புறகலைகள்:**

| | | |
|---|---|---|
| 1. கரகாட்டம் | 2. காவடியாட்டம் | 3. தெருக்கூத்து |
| 4. பொம்மலாட்டம் | 5. தோற்ப்பாவை | 6. ஓவியம் |
| 7. சிற்பம் | 8. கதைச்சிற்பம் முதலியன | |

- பிறந்த குழந்தைக்குப் பாடுவது - தாலாட்டுப் பாடல்
- வளர்ந்த பிள்ளைக்குப் பாடுவது - விளையாட்டுப் பாடல்

- ❖ களைப்பு நீங்க வேலை செய்பவர்களால் பாடப்படுவது - தொழிற் பாடல்
- ❖ திருமணம் மற்றும் பிறநிகழ்ச்சிகளில் பாடுவது - சடங்குப் பாடல் (அ) கொண்டாட்டப்பாடல்
- ❖ சாமிகும்பிடும் போது பாடப்படும் பாடல் - வழிபாட்டுப் பாடல்
- ❖ இறந்தோருக்குப் பாடப்படும் பாடல் - ஒப்பாரிப் பாடல்
- ❖ பழங்காலபண்பாட்டின் எச்சம் - நாட்டுப்புறப்பாடல்கள்
- ❖ கதிர் அறுப்புபாடல்கள் - தொழில் பாடல்கள்

- ❖ நாட்டுப்புற இலக்கியத்தில் அடங்குவது பழமொழிகள், விடுகதைகள், கதைபாடல், தொழில் பாடல், தெம்மாங்குப் பாடல், களையெடுப்பு பாடல், மீன்பிடி பாடல்

**நாட்டுப்புறப்பாடல் (மீனவர் பாடல்):**

- ❖ விடிவெள்ளிநம்விளக்கு - ஜலசா
- ❖ விரிகடலேபள்ளிக்கூடம் - ஜலசா
- ❖ அடிக்கும் அலையேநம்தோழன் - ஜலசா
- ❖ அருமைமேகம் நமதுகுடை - ஜலசா
- ❖ காயும் ரவிச்சுடர் கூரை - ஜலசா
- ❖ கட்டுமரம் வாழும் வீடு - ஜலசா
- ❖ மின்னல்வலைஅரிச்சுவடி - ஜலசா
- ❖ பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் - ஜலசா
- ❖ மின்னல் இடிகாணும் கூத்து - ஜலசா
- ❖ வெண்மணலேபஞ்சுமெத்தை - ஜலசா
- ❖ முழுநிலாதான் கண்ணாடி - ஜலசா
- ❖ மூச்சடக்கிநீந்தல் யோகம் - ஜலசா
- ❖ தொழும் தலைவன் பெருவானம் - ஜலசா

**ஒப்புமைகள்:**

- விடிவெள்ளி - விளக்கு
- கடல் அலை - உற்றதோழன்
- மீன்பிடிவலை - படிக்கும் நூல்
- கட்டுமரம் - வாழும் வீடு
- தொண்டுசெய்துவாழ்பவர்கள் - தொழிலாளர்கள்
- காயும் கதிர் - வீட்டுக்கூரை
- பரந்தகடல் - பள்ளிக்கூடம்
- தோன்றும் மேகம் - குடை
- பிடிக்கும் மீன்கள் - பொருள்கள்
- இடிமின்னல் - பார்க்கும் கூத்து
- வெண்மணல் - பஞ்சுமெத்தை

- முழுநிலவு - முகம் பார்க்கும் கண்ணாடி
- மூச்சடக்கி நீந்துதல் - வழிபாடு
- வணங்கும் தலைவன் - பெருமிதம்

## சித்தர்கள்

### 1. திருமூலர்

- ❖ திருமந்திரத்தை இயற்றியவர்- திருமூலர்
- ❖ திருமந்திரம் சைவத் திருமுறையில் 10 ஆம் திருமுறைஆகும்.

### 2. சிவவாக்கியர்

- ❖ மிகுந்த சீர்திருத்தவாதி
- ❖ இவர் பாடிய பாடல்கள் 520, யோகசித்தர் என அழைக்கப்பட்டார். இவரது பாடல்கள் சிந்தனையும் தெளிவையும் தரவல்லன.

### 3. பட்டினத்தார்:

- ❖ இயற்பெயர் - சுவேதாரண்யர்
- ❖ மற்றொருபெயர் - திருவெண்காடர் என்ற பெயரும் உண்டு.
- ❖ பெற்றோர் - சிவநேசசெட்டியார் - ஞானகலைஆச்சி.
- ❖ நிலையாமையினை உணர்ந்தயோகி என அழைக்கப்பட்டவர் - பட்டினத்தார்

### 4. பத்திரகிரியார்:

- ❖ துளுவ நாட்டு மன்னர் பட்டினத்தாரை கழு ஏற்ற முயன்ற போது தோற்றார்.
- ❖ 235 கண்ணிகள் பட்டினத்தாருக்கு அடிமையாகி அரச இன்பங்களைதுறந்தார்.
- ❖ இவரது பாடல்கள் பத்திரகிரியார் புலம்பல்கள் எனப்படும்.
- ❖ இவர் பெண்ணின் மாண்பை போற்றுவதை பேய் போல் திரிந்து பிணம் போல் கிடந்து பெண்ணைத் தாய் போல் நினைத்துத் தவம் முடிப்பது எக்காலம் என்ற சிந்தனையின் வழி அறியலாம்.

### 5. பாம்பாட்டி சித்தர்:

- ❖ பாம்பு வடிவாக மண்டலத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன் மூலம் ஆன்ம தரிசனம் பெற இயலும் என்பது இவரது கொள்கை.
- ❖ மனித உடலின் அடிவயிற்றுப்பகுதியில் எருவாய்க்கும் கருவாய்க்கும் நடுவில் பாம்பு புற்றில் கிடப்பது போல் இருப்பது குண்டலினி சக்தி.
- ❖ இதனை எழுப்பி மேலே செலுத்த ஆடுபாம்பே என பாடியதால் பாம்பாட்டிசித்தர் எனப்பட்டார்.
- ❖ இவர் 129 பாடல்கள் பாடியுள்ளார். கொங்கு நாட்டு மருதமலையில் வாழ்ந்தார்.

## 6. இடைக்காட்டுச் சித்தர்:

- கோனார் என வழங்கப்படும் இடையர்களையும் ஆடு மாடுகளையும் முன்னிறுத்தி பாடியதால் இவருக்கு இப்பெயர் வழங்கப்பட்டது.
- இடைக்காடு என்னும் ஊரைச் சேர்ந்தவர் ஆதலால் இடைக்காட்டுச் சித்தர் என்ற பெயர் வழங்கலாயிற்று.
- கொங்கன சித்தரின் சீடர் - இடைக்காட்டுச் சித்தர்
- காலம் கி.பி.15.ஆம் நூற்றாண்டு
- அவித்தவித்து முளையாதே தாண்டவக்கோனே - பத்தி
  அற்றவர் கதியடையார் தாண்டவக்கோனே - எனக் கூறுவதன் மூலம் கடவுள் பக்தியையும் மேன்மையையும்அறிய முடிகிறது.

## 7. அகப்பேய் சித்தர்

- அலையும் மனத்தைப் பேய் என உருவகித்ததால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.
- பேய் மனதை பெண்ணாக விளித்துப்பாடியவர் - அகப்பேய் சித்தர்
- முனதை அலைய விடாமல் ஒரு நிலையில் நிறுத்த வேண்டும் என்பதனை
  - ஆரலைந் தாலும் நீயலையாதேடி
    ஊரலைந் தாலும் ஒன்றையும் நாடாதே - என அறிவுறுத்துகிறார்.

## 8. குதம்பைசித்தர்:

- குதம்பை என்பது காதணி. குதம்பை அணிந்த பெண்களை முன்னிலைப்படுத்தி பாடியதால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை - 32.

## 9. கடுவெளிச்சித்தர்

- 400 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள் - சித்தர்கள்
- உருவ வழிபாடு செய்யாமல் வெட்ட வெளியையே கடவுளாக வழிபட்டவர் - கடுவெளிச்சித்தர்
- பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுனிச் சித்தர் ஆகியன இவரின் காரணப்பெயர்கள் ஆகும்.
- குதம்பை என்பது காதணி ஆகும்.

**மேற்கோள்:**

வைதோரைக் கூட வையாதே - இந்த
வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே **- கடுவெளிச்சித்தர்**

நந்தவனத்தில் ஓர் ஆண்டி-அவன்
நாலாறுமாதமாய்க் குயவனைவேண்டி

கொண்டுவந்தான் ஒருதோண்டி- அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுஉடைத் தாண்டி
என்னும் பாமரரும் அறிந்தபாட்டு இவருடையதே.

## 10. அழுகுணிச் சித்தர்:

- ❖ இவரது பாடல்கள் அழகும் அணிநயமும் மிகுந்த காணப்படுவதால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. பாமரமக்களால் அழுகுணிசித்தர் எனஅழைக்கப்பட்டார்.
- ❖ பையூரிலேயிருந்துபாழுரிலே பிறந்து மெய்யூரில் போவதற்கு வேதாந்தவீடறியேன்.

## 11. கொங்கணிசித்தர்:

- ❖ காலம் கி.பி.7ஆம் நூற்றாண்டு கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்.
- ❖ கொங்கு நாட்டைச் சேர்ந்தவர். ஆதலால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.
- ❖ இவர் ரசவாதம், யோகம், மருத்துவம் பற்றிய நூல்கள் எழுதியுள்ளார்.
- ❖ கொங்கணிசித்தர் முக்திபெற்ற இடம் திருப்பதி.

**மேற்கோள்:**

கண்டதும் கேட்டதும் சொல்லாதேகண்ணில்
காணாதஉத்தரதம் விள்ளாதே
பெண்டாட்டிக்குஉற்றதுசொல்லாதேபெற்ற
பிள்ளைக்கு இளப்பம் கொடுக்காதே.

## 12. சட்டமுனி:

- ❖ சட்டமுனி 1200,திரிகாண்டம், சரக்குவைப்பு, நவரத்தினவைப்பு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். தயக்கத்தினால் வரும் தீமைபற்றி பாடியுள்ளார்.

## 13. அகத்தியர்:

- ❖ முதல் சித்தர் அகத்தியர், இவர் குருமுனி, நாதமுனி என்றும் அழைக்கப்படுகிறார்.
- ❖ அனைத்து சமயத்தின் கொள்கைகளையும் அவற்றில் உள்ள மேன்மைகளை போற்ற வேண்டும் என்றவர் - அகத்தியர்.

## 14. சுப்பிரமணியசித்தர்:

- ❖ இறைவனை முருகனாகவே காண்கிறார். புல பாடல்களில் முருகனை மயில் வீரன் எனக் குறிப்பிடுகின்றார்.

## 15. போகர்:

- திருமூலரின் மாணாக்கர் - காலங்கிநாதர்.
- காலங்கி நாதரின் மாணாக்கர் - போகர்.
- இயற்றிய நூல்கள் - போகர் ஏழாயிரம், போகர் திருமந்திரம், நிகண்டு பதினேழாயிரம் முதலான நூல்களை எழுதியுள்ளார்.
- மருத்துவ பழஞ்சுவடிகளை போகரின் பெயரால் கூறுவது நடைமுறையில் காணப்படுகிறது.
- போகர் நிகண்டு சித்த மருத்துவம் குறித்த நூலாகம்.
- இவர் முக்தி பெற்ற இடம் பழனி.

## 16. உரோமமுனி:

- இவரது உடல் முழுவதும் உரோமம் மிகுதியாக இருந்ததால் இவருக்கு உரோம முனி என்ற காரணப் பெயர் வழங்கலாயிற்று.
- இயற்றிய நூல்கள் - உரோம முனிஞானம், உரோமமுனி நூறு, உரோமமுனி ஐநூறு, ஐம்புலநூல் ஆகியவை இவரது படைப்புகள்.

## 17. கரூவூர் சித்தர்

- கருவூரில் பிறந்ததால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.
- தஞ்சையில் இராஜராஜன் கட்டிய பிரகதீஸ்வரர் கோவிலின் லிங்கத்தை இவர் நிறுவினார் என்பது மரபு.
- தஞ்சை பெரிய கோவிலில் கரூவூர் சித்தருக்கு சிலை உள்ளது.
- இவர் பூஜைக்கு உரிய ஆகம விதிகளை பாடியுள்ளார்.

## 18. தேரையர்:

- பாண்டிய மன்னனின் தலைக்குள் இருந்த தேரையை அகற்றியதால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.
- இயற்றிய நூல்கள் - நோய் அணுகவிதி, பாதார்த்தகுணசிந்தாமணி, வைத்தியசிந்தாமணி, கலைஞானம் முதலான நூல்களை இயற்றியுள்ளார்.
- வைத்தியத்தில் மிகவும் புலமைப்பெற்றவர்.
- அகத்தியரின் மாணாக்கரில் ஒருவர் - தேரையர்.